நாடாளுமன்றத் தேர்தல் - 2024

நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு சுற்றுப்பயணம்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, பிப். 22 -

'நாடாளுமன்றத் தேர்தல் -2024-நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுதிருவண்ணாமலையில் சுற்றுப் பயணம் குறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர்எ.வ.வேலுவிடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க. சார்பில், நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு, திருவண்ணாமலைநாடாளுமன்றத் தொகுதி, ஆரணி நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட பகுதிகளுக்கு வருகைதந்து,பொதுமக்கள், வியாபாரிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் பரிந்துரைகளை, தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் சந்தித்து பெறவுள்ள னர்.

தமிழ்நாடுமுதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கியஅறிவுரையின்படி, 2024 நாடாளு மன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு, திருவண்ணாமலைநாடாளுமன்றத் தொகுதி, ஆரணிநாடாளுமன்றத் தொகுதிகளின் பரிந்துரைகளை நேரில் சந்தித்து பெறுவதற்காக, நாளை (பிப்ரவரி 23ம் தேதி - வெள்ளிக்கிழமை) மாலை 3.00மணிக்கு,ஆரணிநகரம், சேவூர் பைபாஸ் சாலையில் உள்ள ராஜ் பிரியா திருமண மண்டபத் தில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்களின் தலைமையில் வருகைத்தர உள்ளார்கள்.

அதுசமயம்,திருவண்ணாமலை, ஆரணிநாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்டமாவட்ட,ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வா கிகள்தேர்தல் அறிக்கைதயாரிக்கும்குழுவினருடன் தொடர்பு கொண்டு,

நமதுமாவட்டத்திற்குரிய வணிகர்சங்கங்கள்,விவசாயிகளின்பிரதிநிதிகள்,நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனை வோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின்பிரதிநிதிகள், சுற்றுச் சூழல் ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்டஅனைத்துத்தரப் பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழுவினரை சந்திப்பற்கானஏற்பாடுகளைஒருங்கிணைக்கவேண்டுமெனகேட்டுக் கொள் கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் வார் ரூமை தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கீதா ஜீவன், கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. ஆகியோர் இணைந்து திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன், தினேஷ், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே. சரவணன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.குபேர் இளம்பரிதி, தலைவர் நாகராஜன், துணைத்தலைவர் அழகர்சாமி, துணை அமைப்பாளர்கள் பிரபு, மகேந்திர குமார், வெயில் முத்து, விநாயக மூர்த்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், அயலக அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.பி.அசோக், அயலக அணி துணை அமைப்பாளர் என்.எஸ்.கிறிஸ்டோபர், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அபிராமி நாதன் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர் மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ள - மீனாட்சி சொக்கநாதர்

ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இராஜகோபுரம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்!

சட்டப்பேரவையில் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, பிப்.22-

"மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ள மீனாட்சி சொக்கநாதர், ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இராஜ கோபுரம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்!" என, சட்டப் பேரவையில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு குறிப்பிட்டார்.

இது குறித்து விவாதம் வருமாறு:-

எஸ்.சதாசிவம்: மேட்டூர் நகராட்சிப் பகுதியிலுள்ள மீனாட்சி சொக்கநாதர் மற்றும் ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக் கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் இராஜ கோபுரம் கோரியுள்ள திருக்கோயிலானது 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்ட திருக்கோயிலாகும். இந்த திருக்கோயிலுக்கு ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் விமானங்கள் மற்றும் பரிவார சன்னதிகளின் திருப்பணி பாலாலயம் இன்று தொடங்கப்பட்டுள்ளது. மூன்று நிலை ராஜகோபுரம் அமைப்பதற்கு மண் பரிசோதனை செய்யும் பணி முடிவுற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து அடுத்தகட்ட பணிகளை விரைவுப்படுத்தி மூன்று நிலை ராஜகோபுரம் கட்டுகின்ற பணியை விரைவில் தொடங்கப்படும்.

எஸ்.சதாசிவம்: அந்த கோயிலுக்கு ராஜகோபுரம் வேண்டும் என்று கேட்டு, அதும் அது ஆய்வில் இருக்கிறது என்று சொல்லி இருக்கின்றார்கள். அந்த கோயிலில் 17 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பில் இருக்கின்றது அதை அகற்ற வேண்டும். அதேபோல் கோயில் குடமுழுக்கு செய்யும் போது அன்னதானத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். குளத்தூர் ஒன்றியம் பாலவாடியில் இருக்கும் ஜல கண்டேஸ்வரர் கோயில் 15 ஆண்டு காலம் குடமுழுக்கு செய்யாமல் இருக்கின்றது. அதற்கு குடமுழுக்கு செய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கோனூர் கிராமத்தில் சென்றாய பெருமாள் கோயிலில் திருப்பணி முடிந்த நிலையில் இருக்கின்றது. எப்போது கும்பாபிஷேகம் நடைபெறும்?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : உறுப்பினர் கூறிய அந்த 17 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு திராவிட மாடல் ஆட்சியில் இதுவரையில் ரூ. 5,718 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்ட வரலாறு நடந்தேறி இருக்கின்றது. குடமுழுக்குகளை

பொறுத்தளவில் இன்றைக்கு ஒரே நாளில் மட்டும் 32 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடந்து கொண்டிருக்கின்றது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 33 மாதங்களில் 1,428 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலே இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையில் குடமுழுக்கு நடைபெற்ற ஆட்சி என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் கோரிய இராஜ கோபுரத் திருப்பணிக்கு மண் பரிசோதனை முடிந்து விட்டது. சென்றாய பெருமாள் திருக்கோயிலானது சட்டப்பிரிவு 49(i) கீழ் வருகின்ற, போதிய நிதி வசதி இல்லாத திருக்கோயிலாக இருந்தாலும், உபயதாரர் நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.சதாசிவம்: மேச்சேரி பசுபதீஸ்வரர் கோயில், காமாட்சி அம்மன் கோயில், புக்கம்பட்டி சென்றாய பெருமாள் கோயில் ஆகிய கோயில்களில் திருப்பணிகள் தொடங்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அந்தப் பணிகளை விரைவுப் படுத்தி குடமுழுக்கு நடத்த வேண்டும் என கேட்டு அமருகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: மேச்சேரி, பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் விருந்து மண்டபம், பக்தர்கள் தங்கும் மண்டபம், பணியாளர் குடியிருப்பு, வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகள் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அப்பணிகளின் ஒப்பந்தக் காலம் 18 மாதங்களாகும். எனவே, அப்பணிகள் 18 மாத காலத்திற்குள் நிச்சயம் முடித்து தரப்படும். முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையைப் பொறுத்தளவில், இன்னார் இனியவர் என்று பார்க்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளதற்கிணங்க, உறுப்பினர் அவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு பி.கே.சேகர்பாபு விவாதம் நடைபெற்றது.

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி

112 வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

வட்டக் கழக செயலாளர் வரதை த.பரி அறிக்கை!

சென்னை, பிப்.22-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112 வது வட்ட கழக செயற்குழு குழு கூட்டம் வட்டக் கழக அவைத் தலைவர் எஸ் மனோகரன் தலைமையில் நாளை (23.2.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 600 மணி அளவில் 5 புலியூர் இரண்டாவது லேன், டிரஸ்டுபுரம், சென்னை 24-ல் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

இதில் மாவட்ட பொருளாளர் ஜே.எஸ்.அகஸ்டின் பாபு, பொதுக்குழு உறுப்பினர் டி.ஜோஷ் டேனியல், மாவட்ட துணை அமைப்பாளர் எம்.ஏ.ஜஸ்டின், பகுதி அவை தலைவர் புவி பாலாஜி, பகுதி துணை செயலாளர் என்.பி.இதயத் பாஷா, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பார்த்திபன், தா.ஐசன்ட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

எனவே 112 வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், பி.எல்.ஏ-2 கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : மார்ச் 1 கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாள், பி.எல்.ஏ-2, பி.எல்.சி-2 கூட்டம், கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வட்டச் செயலாளர் வரதை த.பரி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட

ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் ஜெ.சங்கர் மறைவு!

ஆவடி சாமு.நாசர், வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி அஞ்சலி!

திருவள்ளூர், பிப்.22

திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு தலைவர் பஸ்ஸ்டாண்ட் ஜெ.சங்கர் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார். அன்னாரின் உடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டதைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் விஜி.ராஜேந்திரன், மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், திருவள்ளூர் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிட பக்தன், மாவட்ட துணை செயலாளர்கள் உதயமலர் பாண்டியன்,

சி.சு.இரவிச்சந்திரன், ப.சிட்டிபாபு, த.எத்திராஜ், எஸ்.கே.ஆதாம், ஜெ. மகாதேவன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், டி.கிறிஸ்டி, மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, ஆர்.ஜெயசீலன், மு.நாகன், தி.ஆ.கமலக்கண்ணன், என்.பரசுராமன், ராஜேஷ்வரி கைலாசம், இ.குப்பம், டி.என்.ஆர்.சீனிவாசன், டி.சிவகுமார், மற்றும் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலர்மாலை செலுத்தி அஞ்சலி செலுத்தினார்.

எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் - மு.மகேஷ் குமார் - பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சைதை மேற்குப் பகுதி இளைஞரணி சார்பில் தெருமுனை கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! ப.மீ.யாழினி - தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, பிப். 22-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் இரண்டாவது மாநில தீர்மான விளக்க மாபெரும் தெருமுனைக் கூட்டம் இன்று (22-02-2024 வியாழக்கிழமை) மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை மேற்கு ஜோன்ஸ் சாலையில் உள்ள சாரதி நகர் பேருந்து நிலையம் அருகில் இளைஞர் அணி செயல்வீரர் ஜிம் க.பிரபு தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சைதை மேற்குபகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி செயலாளரும் பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் ஸ்ரீதரன் எம்.சி., பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், சிறுபான்மை அணியின் மாவட்ட அமைப்பாளர் சைதைசாதிக், வட்ட கழக செயலாளர்கள் சை.மு.சேகர், அட்கோகமலநாதன், ஆகியோர் முன்னிலையிலும் இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், இளைஞர் அணியின் பகுதி துணை அமைப்பாளர்கள் ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன் ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன், திமுக மகளிர் அணி சமூக வலைத்தள மாநில பொறுப்பாளர் மருத்துவர் ப.மீ.யாழினி, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., மாவட்ட நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், சைதைசம்பத், மின்னல்கந்தப்பன், தா.மோகன் குமார்எம்.சி., க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., கவிஞர் காசிமுத்துமாணிக்கம், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கர்எம்.சி., வாசுகி பாண்டியன், சைதை மேற்குகிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, மாவட்ட அமைப்பாளர்கள் எம்.எஸ்.ஹரிபாபு, நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.விநாயக மூர்த்தி, ச.சங்கர்கணேஷ் எம்.சி., ஜெ.இ.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், செ.ரவி,

சைதை மேற்குகிழக்கு பகுதி வட்டகழக செயலாளர்கள் நா.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், மு.இராஜா, க.மணி, கோ.சண்முகம், எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஆர்.எல்.செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.எஸ்.பழனி, எம்.எஸ்.மணி, டி.எஸ்.ரவிச்சந்திரன், அ.தமீம்அன்சாரி, ச.தினகரன், எல்.கார்த்திக், தீ.ராஜ்குமார், கே.பிரபு, மாவுமில்ஸ்ரீதர், வே.புருஷோத்தமன், கு.கார்த்திகேயன், தாஸ், எம்.கார்த்திக், என்.சம்மந்தம், எஸ்.ரவீந்திரகுமார், பி.நரேஷ்குமார், வி.செல்வி, ஸ்டெல்லா ராஜேஸ்வரி, செண்பகம், ஆர்ட்ஸ்குமார்,

என்.தீனதயாளன், எம்.மாறன், ஆர்.ஜி.ஸ்டாலின், ஜி.வெங்கடேசன், ஜெ.வி.பிரதாப், வெ.கிஷோர் குமார், சி.தமிழ்வேல், தமிழன்பன் பகுதி அமைப்பாளர்கள் த.மணி, டி.தியாகு, ஆர்.எஸ்.ரமேஷ், கேபிள் காளி, கோவில்மணி, ஆர்.ஜி.கற்பகம், எஸ்.மல்லிகா, போட்டோமாறன், சார்ப்சரவணன், மு.செல்வகுமார், ராஜாஆறுமுகம், சா.பெனடிக்கிளமெண்ட், எஸ்.திருஞானம், எஸ்.கே.நரேஷ், வட்ட கழக நிர்வாகிகள் இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், ஜி.ஏழுமலை, கொடிசுரேஷ், டி.கோபாலகிருஷ்ணன், என்.முகமதுஅலி, என்.ராஜேஷ், மு.கதிரவன், பொ.பரத்குமார், எஸ்.முருகேசன், சாந்திசுந்தரம், அயாத்பாஷா, சுப்பிரமணியன், முரளி, சந்திரன், காசிநாதன், சபரி, மற்றும் வட்ட செயற்குழு உறுப்பினர்கள் அணிகளின் பகுதி துணைஅமைப்பாளர் கள், இளைஞர் அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், களப் பணியாளர்கள், கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஜி.ரஞ்ஜித், ம.திலீபன் மதிவாணன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் கிழக்கு ஒன்றியம் பள்ளித்தென்னல் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ச.தனஞ்செயன் மறைவுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தினார். ம.ஜெயச்சந்திரன், இரா. ஜனகராஜ், தயா.இளந்திரையன், இரா.சக்கரை, வே.கணேசன், ஆர்.எஸ்.வாசன், கு. செல்வமணி, வி.ஜி. பிரபாகரன், சீனு செல்வ ரங்கம், டி.என்.ஏ.தமின், ப.அன்பரசு உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

வரும் 24.02.2024 சனிக்கிழமை மாலை 04.00 மணி அளவில் இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் இராணிப்பேட்டை மாவட்ட கழக அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) கூட்டம் நடைபெறும்.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி நிர்வாகிகள், சிறப்பு அழைப் பாளர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

பொருள்: 1.தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா,
2. BLA 2, BLC பணிகள் குறித்து,
3. கழக ஆக்கப் பணிகள்

அமைச்சர் ஆர்.காந்தி
செயலாளர்
இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.

10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

ராஜா ஜவுளி உரிமையாளர்
(நினைவில் வாழும்)

Ln. **K.மணி** (வெற்றிலை)
முன்னாள் நகர தி.மு.க. முன்னோடி

மறைவு : 22.02.2014

எங்கள் வாழ்க்கையின்
நான்கு திசைகளிலும்
உன்னை ஓவியமாகவும்
சுவாசத்தின் கவிதையாகவும்
வாசிக்கின்றோம்
அன்புத்தந்தையே!

என்றும் உங்கள் நினைவில்

M.ராஜா ❖ M.உதயா
மாவட்ட பிரதிநிதி

குடும்பத்தினர் மற்றும் ஊழியர்கள்
ராஜா ஜவுளி & ரெடிமேட்ஸ்
மதுராந்தகம்